முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1162

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வேலி கொண்ட அரங்கனே
   ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
   வானவர்கள் மெச்சுகின்ற தர்மத்தை
   வையகம் நோக்கி சக்தியாக வழங்கும் அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 ம் நாள் 04.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
   வரங்களாக நித்தம் யாம் உனக்கு
   வல்லமை கூட்டி அனுதினம் அருளிவர
3. வருகவே அரங்கன் சக்திவழிதான்
   வையகத்தில் மாற்றம் இனிதே நடக்கும்
   தருகின்ற அரங்கன் தர்மத்தின் வழிதான்
   தரணியோர்க்கு தவசித்தி உறுதியாகும்
4. ஆகவே அரங்கன் ஓங்காரக்குடில் நோக்கி
   அகிலத்தார் தொடர்பு கூட்டி
   ஜெகமெங்கும் அரங்கன் புகழ் தன்னை
   சித்தி தரும் மார்க்கமாக உலக மக்கள்
5. மக்களெல்லாம் கடைபிடித்து வருதல் காண
   மாற்றம் சடுதி இந்த பேருலகம் காணும்
   ஆக்கமுடன் அரங்கனுக்கு ஆற்றல்தன்னை
   அளவிலா ஆறுமுகன் வழங்கிவர
6. வருமுலகில் உலகோர் அரங்கன் வழி
   வையகத்தில் என் வெளிப்பாடு கண்டு
   பெருமை மிக்க ஞான யுகமாற்றத்தை
   பிரபஞ்சமே அடைய அருள் புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–